# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 85/மா/2023**

**நாள்: 10.05.2023**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் 5 (மேற்கு),
மதுரை மாநகராட்சி அலுவலகம்,
திருப்பரங்குன்றம்
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 31.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.01.2023–ல் பெறப்பட்டு 85/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 31.12.2022 நாளிட்ட தனது மனுவில் :

"மதுரை மாநகராட்சி, மண்டலம்-5, (மேற்கு) பைக்கரா மெயின் ரோடு கதவு எண்.23-ல் இயங்கிவரும் லட்சுமணா மருத்துவமனை 24 மணி நேரமும் செயல்பட்டு கொண்டு வருகிறது. இம்மருத்துவமனை தரை தளம் மற்றும் 5 மாடிகள் கொண்டதாகும். லட்சுமணா மருத்துவமனையில் பல மருத்துவர்கள் செவிலியர்கள், துப்புரவு தொழிலாளர்கள், அலுவலக பணியாளர்கள், காவலர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் லட்சுமணா மருத்துவமனை அனுமதிக்கு மாறாக ஐந்து மாடிகள் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டிட அளவை குறைத்து சொத்து வரி வசூலிக்கப்படுகிறது. மருத்துவர்கள் செவிலியர் மற்றும் துப்புரவு தொழிலாளர்கள், அலுவலக பணியாளருக்கு முறையாக சொத்துவரி செலுத்தாததினால் மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுகிறது. மேலும், இம்மருத்துவமனையில் பல படுக்கைகள் இருப்பதினால், உள்நோயாளிகள் மற்றும் புற நோயாளிகள் சிகிச்சைக்கு வரும்போது வாகனங்கள் நிறுத்துவதற்கு பார்க்கிங் வசதி இல்லை.

இதனால் இரண்டு சக்கர வாகனம், நான்கு சக்கர வாகனங்கள் மருத்துவமனையின் முன்பாக நிறுத்துவதினால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேற்படி லட்சுமணா மருத்துவமனை மக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965-ன் பிரிவு 2 (8) (Section 2 (8) of the Tamilnadu Public Buildings (Licensing) Act 1965)-ன்படி பிரிவு 2 (8) (Section 2 (8) of the Tamilnadu Public Buildings (Licensing) Act 1965)-ன்படி முறையாக அனுமதி இல்லாமல் கட்டிடம் விதிகளுக்கு மீறி கட்டப்பட்டு உள்ளது. மேலும், லட்சுமணா மருத்துவமனை பொது மக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் 1973-ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தால் (Directorate of Town and Country Planning) ஒப்புதல் பெறவில்லை. மேலும் இம்மருத்துவமனை கட்டிடத்திற்கு, வருவாய் துறையின் முன் அனுமதியும் பெறவில்லை. மேற்படி லட்சுமணா மருத்துவமனை எந்த ஒரு திட்ட அனுமதியும் முறையாக பெறாமல் இயங்கிவரும் மருத்துவமனையை கண்காணிக்கத் தவறியது குறித்து 28.12.2022 தேதியில் ஆணையர் மற்றும் உதவி ஆணையர் மதுரை-5 அவர்களுக்கு புகார் மனு அனுப்பியுள்ளேன்.

மேற்படி லட்சுமணா மருத்துவமனை கதவு எண்.23ல் பைக்கராவில் இயங்கிவரும் மருத்துவமனை கட்டிடங்களை கண்காணிக்க தவறியும், முறையாக கட்டிடத்தை அளவீடு செய்யாமல் சொத்துவரி வசூலிக்காமலும், இங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு முறையாக தொழில் வரி வசூலிக்கத் தவறிய முன்னாள் மற்றும் இன்னாள் உதவி ஆணையர்கள், உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் இதர கள அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

லட்சுமணா மருத்துவமனையை சட்டத்திற்கு புறம்பாகவும் விதிகளை மீறியும் கட்டியுள்ள கட்டிடத்தை அகற்றியும் (Remove) நகர் ஊரமைப்பு சட்டம் 1971-ன் பிரிவுகள் 56 (1) மற்றும் 57 – உடன்படிக்கப்பட்ட பிரிவு 85-ன் கீழ் Stop Work Notice / Notice Calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் Lock and Seal and Demolition notice வழங்கியும் மற்றும் அமலாக்க நடவடிக்கை விரைவாக எடுத்தும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிகத் தாழ்மையுடன் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 6.2.2023 நாளிட்ட கடிதத்தில் மதுரை மாநகராட்சியின் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது அவர் தனது 19.04.2023 நாளிட்ட அறிக்கையில்**:

இம்மனு தொடர்பாக மாநகராட்சி பொறியாளரின் குறிப்பினை 05.01.2023ல் பெற்று அதன் அடிப்படையில் முறையீட்டு மனுதாரர் குற்றஞ்சுமத்திய லட்சுமணா மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனையிடம், கட்டிட வரைபட அனுமதி விபரம் கோரப்பட்டது. மருத்துவமனை தெரிவித்த மனையிட வரன்முறை குறித்த விபரம் மேல்முறையீட்டு மனுதாரரான திரு. R. மயில்சாமிக்கு 24.1.2023 மற்றும் 8.2.2023 நாளிட்ட கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் மருத்துவமனை தொடர்பான மனையிட வரன்முறை மற்றும் கட்டிட வரைபட அனுமதி உள்ளிட்ட விபரங்கள் குறித்து மதுரை உள்ளூர் திட்டக்குழுமத்திடம் இவ்வலுவலக 17.4.2023 நாளிட்ட கடிதம் மூலம் விபரம் கோரப்பட்டு மனுதாரர் தெரிவித்தவாறு

மருத்துவமனை கட்டிடம் வரைபட அனுமதிக்கு மாறாக / புறம்பாக கட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் தெரிவித்து முறையீடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரர் புகார் தெரிவிக்கும் லட்சுமணா மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை கட்டிடம் 4000 சதுரடி பரப்பளவிற்கு மேற்பட்டதால், கட்டிட வரைபட அனுமதி வழங்குவது மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் / நகர ஊரமைப்பு துறையின் வரையறைக்குட்பட்டது. மனுதாரர் எவ்வித ஆதாரமும் மாநகராட்சியில் சமர்ப்பிக்காமல், லட்சுமணா மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை அனுமதிக்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது என்றும் லட்சுமணா மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை தரைதளம் மற்றும் 5 மாடிகளை கொண்ட கட்டிடத்தை அகற்றியும், நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56(1) மற்றும் 57 R/W/ 85ன் கீழ் Stop Work Notice / Notice Calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய Lock and Seal, Demolition Notice வழங்கியும் மற்றும் அமலாக்க நடவடிக்கை விரைவாக எடுக்குமாறு தன்னிச்சையாக புகார் அளித்துள்ள மேல்முறையீட்டு மனுதாரரின் செயல் எதேச்சையானது.

மனுதாரர் புகார் தெரிவிக்கும் மருத்துவமனை தொடர்பான இதர புகார்களும் விசாரணையில் உள்ளது. இம்மருத்துவமனைக்கு இரண்டு விரிவிதிப்புகள் முறையே 115/072/900493 மற்றும் 115/072/900494 உள்ளது.

அனுமதி வழங்கப்பட்ட மேற்படி மருத்துவமனைக்குரிய அளவுகள் என்ன என்பது தெரியாமலே, அம்மருத்துவமனை அனுமதிக்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது என்றும் அம்மருத்துவமனை கட்டிடங்கள் அகற்றப்பட வேண்டும் என்றும் உடனடியாக பூட்டி சீலிட வேண்டும் என்ற கோரிக்கை உள்நோக்கம் கொண்டது இயற்கை நீதி கோட்பாட்டிற்கு எதிரான செயலாகும். இதனை நடுவம் விசாரணையின் போது பரிசீலிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

புகார் மனுதாரர் குற்றஞ்சாட்டும் லட்சுமணா மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை தரைதளம் மற்றும் 5 மாடி கொண்ட கட்டிடம் அனுமதிக்கு புறம்பாக கட்டப்பட்டது என்பதற்கு மனுதாரர் எவ்வித ஆவணமும் மாநகராட்சியில் சமர்ப்பிக்கவில்லை.

சொத்துவரி குறைவாக செலுத்தப்படுவதாக மனுதாரர் / நடுவ மேல்முறையீட்டாளர் எதன் அடிப்படையில் கூறுகிறார் என்பதை புகாரில் தெரிவிக்கவில்லை. மேலும், தொழிலாளர் வரி செலுத்தப்படாமல் உள்ளது என்பதற்கும், தொழில்வரி மாநகராட்சிக்கு செலுத்தப்படவில்லை என்ற புகாருக்கும் எவ்வித ஆதாரமும் இல்லை.

வருவாய் துறையின் முன் அனுமதி பெறவில்லை என்றால், வருவாய்த் துறையில் தான் மனுதாரர் புகார் அளிக்க வேண்டும். மாநகராட்சியில் அல்ல என்பதை முறையீட்டாளர் உணரவில்லை. குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன்னதாகவே, சட்டத்திற்கு புறம்பாக லட்சுமணா மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை செயல்படுவதாக முறையீட்டாளர் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது எதன் அடிப்படையில் என்பதை மனுவில் ஆதாரங்களுடன் நிரூபிக்கவில்லை.

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் செயல்பட்டு வரும் மருத்துவமனைகள் உரிய கட்டிட வரைபட அனுமதியின்றி கட்டப்பட்டதாகவும் அல்லது அனுமதிக்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என எவ்வித ஆதாரமும் இல்லாமல் முதலில் புகார் அளிப்பது அதன் பின்னர் தகவலறியும் உரிமைச்சட்டம் 2005-ன்படி புகார் தெரிவிக்கும் மருத்துவமனை கட்டிட வரைபட அனுமதி விபரம் கோரி பெறுவதும், அதன் தொடர்ச்சியாக குறிப்பிட்ட மருத்துவமனையை இடிக்க கோருவது ஆகியன இந்நடுவ மேல்முறையீட்டாளரின் (Modus Operandi) தொடர்ச்சியான செயல்வகையாக உள்ளது.

இந்நடுவ மேல்முறையீட்டாளர் புகாரில் குறிப்பிடும் லட்சுமணா மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனைக்கு கட்டிட வரைபட அனுமதி வழங்கியது மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் / நகர் ஊரமைப்பு துறையாகும். இம்மருத்துவமனைக்கு அனுமதி வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதியில் அனுமதிக்கப்பட்ட கட்டிட அளவுகள் விபரம் வழங்கக்கோரி 17.4.2023 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மதுரை உள்ளூர் திட்டக்குழும / நகர் ஊரமைப்பு துறை உறுப்பினர் செயலரிடமிருந்து புகாரில் குறிப்பிட்ட மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட கட்டிட அளவுகள் கிடைக்கப்பெற்றவுடன் நடுவ மேல்முறையீட்டாளர் தெரிவித்தவாறு அனுமதிக்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்த பின்னர் சட்ட விதிமுறைகள்படி (Under due process of Law) நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.04.2023அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.04.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 20.04.2023 அன்று நாகர்கோவில் சர்க்யூட் ஹவுஸில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தன்னுடைய வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

> "மதுரை மாநகராட்சி, மண்டலம், 5 (மேற்கு) பைக்காரா மெயின் ரோட்டில் திருப்பரங்குன்றம் ரோடு கதவு எண்.23ல் இயங்கிவரும் லட்சுமணா மருத்துவமனை கட்டிடம் தரை தளம் மற்றும் ஐந்து மாடிகளை கொண்டதாகும். இம்மருத்துவமனையில் வாகன நிறுத்த வசதி இல்லாத காரணத்தால் அங்கு கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேற்கண்ட கட்டடத்திற்கு முறையான கட்டட அனுமதி இல்லை. மேலும் மேற்கண்ட மருத்துவமனைக்கு மாநகராட்சியால் முறையாக சொத்து வரி செய்யப்படுவதில்லை. மேலும் அங்கு பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான தொழில் வரியும் வசூலிக்கப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.
>
> எனவே முறையான கட்டட அனுமதி பெறாமல் இயங்கி வரும் மேற்கண்ட கட்டடத்தின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், அம்மருத்துவமனையில் சொத்து வரி மற்றும் தொழில் வரியை மாநகராட்சியால் வசூல் செய்திடவும் தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**மதுரை மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் 20.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரர் தெரிவித்துள்ள லட்சுமணா மருத்துவமனை தொடர்பான மனையிட வரன்முறை மற்றும் கட்டட வரைபட அனுமதி உள்ளிட்ட விவரங்கள் மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்திடம் கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டட வரைபட அனுமதியின் நகல் கிடைக்கப்பெற்றவுடன் மனுதாரரின் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டட அனுமதிக்கு மாறாக அல்லது கட்டட விதிகளுக்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்து உறுதி செய்து அதன் பின்னர் அக்கட்டடத்திற்கு சட்டப்படியான நோட்டீஸ் மாநகராட்சியால் இன்னும் ஒரு மாத காலத்தில் வழங்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மனறத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட மருத்துவமனையில் சொத்து வரியும், தொழில் வரியும் முறையாக வசூலிக்கப்படுகின்றன என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் (மண்டலம் 5) அவர்களின் 19.4.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர் திரு. R. மயில்சாமி, மதுரை மாநகராட்சி மண்டலம் - 5 (மேற்கு) பைக்கரா மெயின் ரோட்டில் திருப்பரங்குன்றம் ரோடு கதவு எண்.23 இயங்கி வரும் லட்சுமணா மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதாகவும் கட்டிடத்திற்கு முறையாக சொத்துவரி வசூலிக்கப்படவில்லையெனவும், அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு உரிய தொழில் வரி பெறுவதில்லை எனவும், அதனால் மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுவதாக கூறி விதிமீறல் கட்டிடமான லட்சுமணா மருத்துவமனை மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன்படி நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் தனது எல்லா புகார் மனுகளிலும், ஒரே மாதிரியான, குறிப்பாக, சொத்துவரி முறையாக வசூலிக்கப்படவில்லையெனவும், தொழிலாளருக்கான வரி வசூல் செய்யப்படவில்லையெனவும், எவ்வித ஆதாரங்களை இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பிக்காமல் புகார் தெரிவிப்பது வாடிக்கையாக கொண்டுள்ளார். மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் உதவி ஆணையர் மேற்கண்ட மருத்துவனை கட்டிடத்திற்கு சொத்துவரி வசூல் செய்யப்படுகிறது என்று தெரிவித்து அதற்கான ஆவணங்கள் இணைத்துள்ள நிலையில், சொத்துவரி வசூலிக்கப்படவில்லை என எவ்வித ஆவணங்களை இணைக்காமல் மனுவில் புகார் தெரிவிப்பது ஏற்புடையது அல்ல. இதை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. இவ்வாறான ஆதாரமற்ற புகாரினை மனுதாரர் தெரிவிப்பதை

இம்முறைமன்றத்திற்கு எப்படிப்பட்ட மனுக்களையும் அளிக்கலாம் என மனுதாரர் கருதுவதாக இம்முறைமன்றம் கருதுகிறது. மனுதாரர் இப்போக்கினை மாற்றிக்கொள்ள வேண்டும்.

மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் உதவி ஆணையர் தன்னுடைய 19.4.2023 நாளிட்ட அறிக்கையில், புகாரில் தெரிவித்த மருத்துவமனை கட்டிடம் வரைபட அனுமதிக்கு மாறாக/புறம்பாக கட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்றும் மருத்துவமனை கட்டிடம் 4000 சதுர அடி பரப்பளவிற்கு மேற்பட்டதால், கட்டிட வரைபட அனுமதி வழங்குவது மதுரை உள்ளூர் திட்டக் குழுமம் / நகர ஊரமைப்பு துறையின் வரையறைக்குட்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

மதுரை மாநகராட்சி மண்டலம் 5ன் உதவி ஆணையர் மனுதாரர் கூறிய புகார்களுக்கு தகுந்த பதில் அளிக்காமல், மனுதாரர் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் கூறியுள்ளார் என்று ஒருதலை பட்சமான கருத்துக்களையும், மருத்துவமனைக்கு ஆதரவாகவும் கருத்துக்களை தெரிவித்துள்ளார். அரசு அதிகாரிகள் புகார் மனு பெறப்பட்டவுடன் அதனை உரிய சட்டமுறைப்படி கள ஆய்வு செய்து அப்புகார் உண்மையெனில், சம்பந்தப்பட்டவர் மீது உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டியது கடமையாகும். அதைவிடுத்து ஒருதலைபட்சமாக, கருத்துக்கள் அடங்கிய அறிக்கை அளிக்க இயலாது. எனவே, மதுரை மாநகராட்சியின் மண்டலம்-5 ன் உதவி ஆணையரின் அறிக்கை ஒரு பொறுப்பற்ற செயலாக இம்முறைமன்றம் கருதுவது மட்டுமல்லாமல் வன்மையாகவும் கண்டிக்கிறது. மனுதாரர் கூறிய புகார்களில் உண்மை இல்லையென்றால் அச்செயல் மனுதாரர்களுக்கும் புகார் கூறப்பட்ட கட்டிட உரிமையாளருக்கும் இடையே உள்ள நிகழ்வாகதான் கருத வேண்டும். அரசு அதிகாரிகள் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு பணிபுரிதல் வேண்டும் என்று முறைமன்றம் சுட்டிக் காட்ட விரும்புகிறது. இம்முறைமன்றத்தில் 2014ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்சட்டம் மற்றும் விதிகளின்படி குறிப்பாக பிரிவு 4ன் கீழ் பெறப்படும் புகார் மனுக்களின் மீது உரிய விசாரணை நடத்தி அதன் மீது ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் குறை தீர்க்கும் மனுக்களில் மீது உரிய நடவடிக்கையைத் தாமதமின்றி எடுக்க வேண்டும் என்று பல நிகழ்ச்சிகளில் உத்திரவிட்டுள்ளார்கள். மேலும், மதுரை மாநகராட்சி மண்டலம் 5ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் மேற்குறிப்பிட்ட கட்டடம், கட்டட விதிகளுக்கு புறம்பாக கட்டப்பட்டு உள்ளதா என்று உறுதி செய்த பின்னர் சட்டப்படியான நோட்டீஸ் மாநகராட்சியால் இன்னும் ஒரு மாத காலத்தில் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். மேற்கண்ட மருத்துவமனையில் சொத்து வரியும், தொழில் வரியும் முறையாக வசூலிக்கப்படுகின்றது என்று தெரிவித்துள்ளார். ஆனால் அதற்கான விவரங்கள் ஏதும் அளிக்கவில்லை. எனவே, மனுதாரரின் புகார் தன்மை குறித்து கள ஆய்வு செய்து உண்மை தன்மை அறியாமலும், தொழிலாளர்களுக்கான தொழில்வரி வசூலிக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்யாமல், காலம் கடந்து அதுவும் இம்முறைமன்றம் விசாரணைக்கு உத்திரவிட்ட நிலையில், நடவடிக்கை எடுத்திருப்பதால்,

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், குறிப்பாக:–

7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(ii) (c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules- மற்றும்

12 (1) பிரிவு The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences in the following manner. namely:-

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for willful negligence or dereliction of duty of any officer or employee of the local body-ன் படியும்:-

மதுரை மாநகராட்சி மண்டலம் - 5 உதவி ஆணையர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்றம் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும் மேற்கண்ட மருத்துவமனையின் கட்டட வரைபட அனுமதி விவரங்களை மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்திடம் விரைந்து பெற்று அதனை ஆய்வு செய்து, விதிகளுக்கு புறம்பாக அக்கட்டடம் கட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து, அவ்வாறு இருப்பின் அதற்கான Notice ஒரு மாத காலத்தில் வழங்கப்படும் என்றும் மதுரை மாநகராட்சி மண்டலம் 5ன் உதவி பொறியாளர் (ம) உதவி செயற்பொறியாளர் தெரிவித்தவாறு, நடவடிக்கை எடுக்கும்படி மதுரை மாநகராட்சியின் மண்டலம்-5ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், இம்முறைமன்ற ஆணையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும், மேற்கண்ட மருத்துவமனையில் முறையாக தொழில் வரி வசூல் செய்யப்படுகிறதா என்பது குறித்தும் இம்முறைமன்றத்திற்கு விரிவான அறிக்கையினை 45 நாட்களுக்குள் அனுப்பி வைக்கும்படி மதுரை மாநகராட்சி, மண்டலம்-5ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Zonal Officers of the Madurai Corporation in Zone – 5 have not acquitted themselves honourably by initiation of necessary action on the petitions received then and there. After all, for levy of Property Tax the Corporation should measure the building in detail as per the approved plan and order assessments. The Town and Country Planning Act has delegated its power to the Local Bodies as follows:-

> "The Government accept the proposal of the Director of Town and Country Planning for delegation of powers of enforcement actions for curtailing unauthorized construction specified in sections 56 & 57 of Tamil Nadu and Country Planning (Amendment) Act, 2008 to the Commissioners of Corporations / Municipalities and Executive Officers of Town Panchayats in addition to Member Secretary of Composite Local Planning Authorities, New Town Development Authorities and Regional Deputy Directors of Town and Country Planning Department."

Why is the 5th Zone hesitant to ask for the Building plan approval from the Hospital itself and instead addressing the Town and Country Planning Directorate Officials in Madurai? This will lead to avoidable delays. Hence it is ordered that the plan copy should be obtained from the Hospital itself apart from the Town and Country Planning Madurai Office and inspection of the Hospital should be carried out within a month's time as undertaken by the officials who deposed before this Forum.

Similarly the Corporation should verify whether Professional Tax has been collected as per the employee strength of the Hospital apart from the slabs prescribed and Rules, Regulations adopted by the Corporation to prevent any loss of revenue to the Local Body. The Zonal Assistant Commissioner of the zone is admonished that the officials in charge of supervising deviations in construction of buildings should be kept accountable and answerable instead of finding fault with the petitioner. This lame excuse would indirectly abet indiscipline, corrupt practices, inaction, lethargy and unnecessary audacity on the part of the field officials who require constant monitoring and mentoring and reprimand for dereliction of duties. The Corporation Commissioner is directed to ensure that the Zone 5 Assistant Commissioner and his field team comply with the directions of the Forum effectively to enforce Building Plan execution as per approval and collection of Professional Tax as per the actual data in existence in the Hospital. The DMA is urged to issue necessary follow-up instructions to the Madurai Corporation to carry forward the orders of the Forum.

2023-ஆம் ஆண்டு மே திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை – 18.
2. ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை – 2.
3. உதவி ஆணையர்,
மண்டலம் - 5, (மேற்கு),
திருப்பரங்குன்றம், தியாகராஜர் கல்லூரி சாலை,
மதுரை – 600 005.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.